بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

March 07 2014

**மொழியாக்கம் : மவ்லவி M.B. தாஹிர் சாஹிப்**

# சர்வ சமய மாநாடு - 2014

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஒதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

ஏறக்குறைய மூன்று வாரங்களுக்கு முன் ஜமாஅத்தே அஹ்மதிய்யா U.K. இங்கிலாந்தில் 100 வருடங்கள் நிறைவடைந்ததையொட்டி ஒரு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டு அது நடந்தேறியது. இதில் பல்வேறு மார்க்கங்களின் ஆலிம்கள், பிரதிநிதிகளுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் தத்தமது புனித வேதங்களின் அடிப்படையில் இறைவன் மற்றும் மார்க்கங்களின் கொள்கையை எடுத்து வைக்கும்படி கூறப்பட்டது. இதில் 21ம் நூற்றாண்டில் இறைவனின் பணி மற்றும் அவசியம் பற்றி கூறுமாறு சொல்லப்பட்டது.

எவ்வாறிருப்பினும், இதில் இஸ்லாத்தின் பிரதிநிதியாக ஜமாஅத் கலந்து கொண்டது. இதில் யூத, கிறித்தவ, புத்த, இந்து போன்ற மார்க்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். மேலும் ஜொராஷ்டிர மற்றும் சீக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். இதுபோன்று பஹாயிகளும் இருந்தனர். அதுமட்டுமின்றி, ஒரு சில அரசியல்வாதிகளுக்கும், மனித உரிமைக் கழகங்களுக்கும் தங்களது கருத்துக்களைக் கூற வாய்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்ச்சி இங்குள்ள மிகப்பெரிய, பழமையான Guild Hill –ல் நடத்தப்பட்டது. இந்தக் கட்டிடம் 1429 அல்லது ஒரு சில அறிவிப்புகளின் அடிப்படையில் அதைவிட முன்பாக கட்டப்பட்ட கட்டிடமாகும். மேலும், இலண்டனின் மிகப் பழமையான இரண்டு கட்டிடங்களில் இதுவும் ஒன்றாகும் என்று கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும், இதற்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உள்ளது. மேலும் இந்த நிகழ்ச்சி M.T.A –விலும் ஒளிபரப்பப்பட்டு விட்டது. பார்த்தும் இருப்பீர்கள். இதன் வரலாற்றுச் சிறப்பு பற்றி அல் ஃபஸ்லில் வெளிவரும் ரிப்போர்ட்டில் கூறப்படும். இதன் வரலாறைக் கூறுவது என்பது எனது நோக்கமல்ல. மாறாக, இதன் அறிமுகமே ஆகும். நடந்த நிகழ்ச்சியைப் பற்றி கூறுவது என்பதே அசல் நோக்கமாகும். நான் கூறியது போன்று இது M.T.A –வில் ஒளிபரப்பப்பட்டு விட்டது. மேலும் எனது உரையின் உருது மொழியாக்கமும் செய்திருப்பார்கள் என நம்புகிறேன். நான் பார்க்கவில்லை. ஆனால் இந்த மிகப்பெரிய நிகழ்ச்சியின் முழு விபரம் அல்லது ஓரளவுக்காவது நான் எனது குத்பாவில் கூறினால் சிறந்ததாக இருக்கும் என பாகிஸ்தானிலிருந்து கேட்டுக் கொண்டுள்ளார்கள். எவ்வாறு கேட்பவர்கள் நல்ல முறையில் கேட்பதற்கும், அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கும், மேலும் அதிலிருந்து பலன் பெறுவதற்கும் நான் எனது சுற்றுப் பயணங்கள் பற்றி கூறுவது போன்று இதனைப் பற்றியும் கூறுகிறேன்.

ஒரு சில நிகழ்ச்சிகளை M.T.A –வில் ஒரு சிலர் பார்ப்பதுமில்லை. இங்கும் நான் கடிதங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு கடிதத்தில் இந்த நிகழ்ச்சியை இந்த செய்தித்தாளில் படித்தேன் என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்த நிகழ்ச்சி M.T.A –விலும் ஒளிபரப்பப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், குத்பாவை மக்கள் சிறந்த முறையில் கேட்கின்றனர். எனவே நான் இதனை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன். ஆனால் எப்போது M.T.A –வில் வந்தாலும் அஹ்மதிகள் அதைப் பார்க்க வேண்டும். அது மிகச் சிறந்ததாகும். ஒரு நல்ல பயன் அளிக்கக் கூடிய நிகழ்ச்சியாகும். இப்போது நான் பேச்சாளர்களின் சுருக்கத்தின் ஒரு சில வரிகளை எடுத்துக் கூறுவேன். மேலும் விருந்தினர்கள் மற்றும் மற்றவர்களின் தாக்கங்களையும் எடுத்துக் கூறுவேன். இதன் மூலம் அல்லாஹ்வின் உதவிகளும், அருள்களும் தென்படும். மாறாக, ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் பேரன்பரின் மூலம் ரஸூல் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் இஸ்லாத்தின் மகத்துவம் உலகில் நிலைபெறுவதை இந்த உலகம் கண்டு கொள்ளும்.

இந்த நிகழ்ச்சி தொடர்பான விபரங்களைக் கூறுவதற்கு முன் முதல் விஷயம் ஒன்றைக் கூறி விடுகிறேன். இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை நடத்திய U.K. ஜமாஅத்தின் ஏற்பாட்டாளர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன் எந்த அளவுக்கு இந்நிகழ்ச்சியைப் பற்றி விளம்பரப்படுத்தியிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு செய்யவில்லை. நாம் நிகழ்ச்சி நடத்துகிறோம். இத்தனை பேர் வருவார்கள் என்று மட்டும் மகிழ்ச்சி அடைந்து விட்டார்கள். ஆனால் மிக விரிவான அளவில் ஜமாஅத்தை அறிமுகம் செய்வதற்கும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்புவதற்கும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக இருந்தது. அதிகமான அளவில் மக்களுக்கு தெரிவித்திருக்கலாம். பிரஸ்ஸோடு நல்ல தொடர்பு இருந்திருந்தால் செய்திகளை வெளியிடுவதற்கு இப்போது அமீர் மற்றும் அவர்களுடைய குழு செய்கின்ற பணி தானாகவே நடந்திருக்கும். மேலும் இதை விட சிறந்ததாக நடந்திருக்கும். இன்றைய காலத்தில் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு பிரஸ் மிகப்பெரிய வழியாகும். இது தொடர்பாக உலகின் அதிகமான நாடுகளின் ஜமாஅத்துகளில் எந்த அளவு வேலை நடக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நடக்கவில்லை. பலவீனம் காட்டப்படுகிறது. இப்போது அமெரிக்காவில் சிறிது காலமாக சிறப்புத்தன்மை ஏற்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள். இது தொடர்பாக ஆப்பிரிக்காவில் கானா மற்றும் செராலியோனில் சிறந்த முறையில் பணிகள் நடக்கின்றன. மேலும் தற்போது ஒருசில ஆஃப்பிரிக்க ஃபிரான்கோஃபோன் நாடுகளில் இதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், எல்லா மட்டத்திலும் மீடியா வரை நமது தொடர்பு இருக்க வேண்டும். அதன் மூலமாக ஜமாஅத்தே அஹ்மதிய்யா பற்றிய அறிமுகம் மற்றும் இஸ்லாத்தின் அழகிய போதனை உலகிற்குத் தெரிய வேண்டும். மேலும் தப்லீகில் வேகம் ஏற்பட வேண்டும். இதுவும் தப்லீகிற்கான மிகப்பெரும் வழியாகும். ஜமாஅத்திற்கு இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இப்போது நான் நிகழ்ச்சி தொடர்பாக சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஒரு சில பேச்சாளர்கள் நல்ல விஷயங்களைக் கூறினார்கள். அல்லாஹ் அவர்கள் என்ன கூறினார்களோ அது அவர்களின் உள்ளங்களின் குரலாக இருக்கவும், அதன்படி அமல் செய்வதற்கான வாய்ப்பையும் வழங்குவானாக!

***முதலில் இங்குள்ள ஒரு இந்து கவுன்ஸிலின் சேர்மன் உமேஷ் சந்தர் ஷர்மா சாஹிப் கூறுகின்றார்கள்:***

இன்றைய தலைப்பு மிகவும் உள்ளத்தைக் கவரக்கூடியதாகும். மேலும் இந்த உலகில் இறைவன் இருக்கிறான் என்று நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வது இதிலிருந்து நிரூபணமாகிறது. இரண்டாவது தெளிவான விஷயம் என்னவென்றால், அரசியல் தலைவர்கள் மற்றும் பிற அமைப்புகளால் உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றிபெற இயலவில்லை. எல்லா பக்கமும் சண்டையும், குழப்பமும் பரவியுள்ளது. மேலும் மக்களுக்கு அரசியல்வாதிகளின் மீதிருந்த நம்பிக்கை போய்விட்டது. எனவே எனது பார்வையில் மனித குலத்தின் நன்மைக்காக மீண்டும் மார்க்கத்தின் பக்கம் திரும்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. மேலும், நாம் நமது மார்க்கத்திற்கேற்ப நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

***மேலும், பிறகு இவர் கூறுகிறார்:*** மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் நமது மக்களுக்கு வெறும் அறிவுரைகளை மட்டும் கூறாமல் நமது முன்மாதிரியையும் காட்டுபவர்களாக இருக்க வேண்டும். இதுவே உண்மையும் ஆகும். அல்லாஹ் இந்த பேச்சாளர் கூறியது போன்று அமல் செய்பவருமாக இருக்கச் செய்வானாக! பிறகு இங்கு இலண்டனில் இருக்கும் புத்த மதத்தின் பிரதிநிதி தலாய்லாமாவின் தூதுச் செய்தியைப் படித்துக் காட்டினார்.

***அவர் கூறுகிறார்:*** அனைத்து மார்க்கங்களும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும் ஒருவருக்கொருவர் அன்போடும் பொறுமையோடும் இருக்குமாறே போதனை வழங்கியுள்ளன. எனவே அவர்களுடைய கொள்கைகள் நம்முடைய கொள்கைகளை விட்டு வேறுபட்டிருந்தாலும் நாம் அவர்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும். ஒவ்வொரு உண்மையான மார்க்கமும் தத்தமது நேரத்தில் உயர்வான போதனை வழங்கியுள்ளது. இனி வரக்கூடிய காலத்திலும் கூட இந்த மார்க்கத்தைக் கருத்தில் கொள்வதே உலகில் அமைதியை நிலைநாட்டவும், சமமாகவும், ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழ்க்கை நடத்துவதற்கும் ஒரு சிறந்த வழியாக இருக்கும். மேலும், நமது மார்க்கம் வழங்குகின்ற போதனைகளின்படி நாம் நல்லெண்ணத்தோடு நமது தினசரி வாழ்க்கையில் மேலான ஒழுக்கத்தில் நிலைபெறுவது நம் அனைவரின் மீதும் கடமையாகும். எவ்வாறிருப்பினும் அவருடைய இந்த விஷயங்கள் மிகச் சரியானதாகும்.

***கூறுகிறார்:*** எப்போது மக்கள் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்வதில்லையோ அப்போதுதான் மார்க்கத்தின் பெயரில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. கூறுகிறார்: நாம் அனைவரும் சேர்ந்து மார்க்க சகோதரத்துவத்திற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறிது காலமாக எண்ணிக் கொண்டிருந்தேன். அதன் மூலம் ஒருவருக்கொருவர் புரிதல் ஏற்பட்டு உலகில் அமைதியை நிலைநாட்டுவது சாத்தியமாக வேண்டும்.

***கூறுகிறார்கள்:*** இங்கிலாந்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக 11 பிப்ரவரி 2014 அன்று நடக்கக்கூடிய உலக சர்வ சமய மாநாட்டை நடத்தும் துணிச்சலான நடவடிக்கையைப் பாராட்டுகிறேன். மேலும் இந்த மாநாடு நல்ல விளைவை தரக்கூடியதாக இருக்கும் எனவும் நம்புகிறேன். எவ்வாறிருப்பினும் அதிகமான பேச்சாளர்கள் காலத்திற்குத் தேவையான நல்ல விஷயங்களைப் பேசியுள்ளார்கள்.

***பிறகு துருதீ மார்க்கத்தின் ஆன்மீகத் தலைவர் ஷேக் மஃ்பீக் சாஹிப் கூறுகிறார்கள்:***

நாம் எப்படிப்பட்ட சமுதாயம் என்றால் முகத்தஸ் பூமியில் இருக்கக் கூடிய அனைத்து மார்க்கங்களோடு வலுவான தொடர்புள்ளது.

இந்த மார்க்கம் பாலஸ்தீனம், இஸ்ரேல், சிரியா போன்ற பகுதிகளில் அதிகமாக உள்ளது.

***கூறுகிறார்கள்:*** புனித பூமி எப்படிப்பட்ட பூமி என்றால், அங்கிருந்து தான் அதிகமான மார்க்கங்கள் பிறந்தன. மேலும் அதிகமான நபிமார்களின் ஆன்மீகப் பயணம் ஆரம்பமானது.

***கூறுகிறார்: திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்.***

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ

لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿۱۴﴾

*மக்களே! நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் கண்ணியமிக்கவர், உங்களுள் இறையச்சமிக்கவரே. நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனுமாவான். (22:14)*

***கூறுகிறார்:*** அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மற்றும் அவர்களது ஜமாஅத்திடமிருந்து, நான் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு வந்தது. நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி நடத்தக்கூடிய இந்த மாபெரும் மாநாட்டிற்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். புனித பூமியில் எங்களது தரூதீ மார்க்கத்திற்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் நல்ல நட்புறவு உள்ளது. நீங்கள் எங்களை அழைத்ததில் மிக்க மகிழ்ச்சி! வாருங்கள்! நாம் அனைவரும் இணைந்து அநீதியை எதிர்ப்போம்! மத்திய கிழக்கில் மட்டுமல்ல. முழு உலகிலும் அன்பின் நீரூற்று பீரிடுகின்ற விதையை விதைப்போம்.

***பிறகு கதீட்ரல் சர்ச்சின் Arch Bishop Kaven Mcdonald கூறினார்:***

எனக்கு இந்த சர்வ சமய மாநாட்டில் கலந்து கத்தோலிக்க சர்ச்சின் பிரதிநிதியாக எனது உரையை நிகழ்த்துவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்நேரத்தில் உலகிற்கு இதுபோன்ற மாநாடுகளின் தேவை மிக அதிகமாக உள்ளது. பிறகு போப்பின் கேபினட்டின் Councillor of Justice & Peace –ன் Presdient ஆக உள்ள கார்டினல் பீட்டர் ட்ரெக்ஸன் உடைய தூதுச் செய்தியைப் படித்துக் காட்டினார். அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டனில் 100 ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் இந்நிகழ்ச்சியில் நான் உங்களோடு உரையாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இக்கூட்டத்தின் சிறப்பம்சம் என்னவென்றால், உலகம் முழுவதுமிருந்தும் பல்வேறு மார்க்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது பற்றி பேசுகின்றனர்.

***அங்குள்ள ஒரு ரிபாயி பேராசிரியர் Daniel Sperber கூறுகிறார்கள்:***

நாம் எந்த சமூகத்தில் இருக்கிறோமோ அங்கு வெளிப்படையான முன்னேற்றம் மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது. இவர் இஸ்ரேலைச் சேர்ந்த ரிபாயி ஆவார். பணக்காரர்கள் மற்றும் ஏழைகளுக்கு இடையேவுள்ள பொருளாதார வேறுபாடு மிக அபாயகரமான அளவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மேலும் முன்னேற்றம், சொகுசு என்ற பெயரில் உலகின் அருள்களைச் செலவிடுவதில் வீண் விரயம் செய்கின்றோம். தூய்மையான தண்ணீரை அசுத்தமாக்குகிறோம். காடுகளை அழிக்கின்றோம். நாம் கடந்து செல்கின்ற இந்தக் காலத்தில் எல்லா பக்கமும் மார்க்கம் மற்றும் அரசியல் பிரச்சனைகள் உள்ளன. குழப்பம் நிறைந்துள்ளது. இறைவனது பெயர் மற்றம் அவனால் வழங்கப்பட்ட நேர்வழி அழிக்கப்படுகின்றது. இந்த அனைத்து செயல்களும் அரசியல் ஆதாயத்திற்காக செய்யப்படுகின்றன. வாருங்கள்! நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து இதற்கெதிராக பணியாற்றுவோம்.

அல்லாஹ் இவருடைய இந்த விஷயங்களை இவருடைய ஆட்சியாளர்களுக்கு புரியக்கூடியதாக்குவானாக! மேலும் இவர்கள் அவர்களுக்கு சொல்லக் கூடியவர்களாகவும் ஆக்குவானாக! மேலும் ஒரு சில அரசியல்வாதிகளின் தூதுச் செய்திகளும் உரைகளும் இருந்தன.

கானா உடைய ஜனாதிபதியின் தூதுச்செய்தியை அவரது High Commissioner படித்துக் காட்டினார். அவரது பிரதிநிதியும் வந்திருந்தார். மீண்டும் ஒருமுறை இந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அல்லாஹ் தனது அன்பிற்குரிய நபியை இவ்வுலகில் அனுப்பினான். அவர்கள் இவ்வுலகில் இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் எவ்வித நிற, சமுதாய வேறுபாடின்றி அனைவருக்கும் மனிதன் அமைதியான, கட்டுப்பாடான, ஒருவருக்கொருவர் அன்போடு வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற தூதுச் செய்தியைக் கூறியுள்ளார்கள்.

***பிறகு இவர்கள் எழுதியுள்ளார்கள்:*** கானாவில் அமைதி நிறுவப்பட்டு விட்டது. மார்க்க சமத்துவம் உள்ளது. ஒருவருக்கொருவர் பிரதிநிதியாக உள்ளனர்.

***பிறகு இங்குள்ள பேரோனிஸ் ஷஹீதா வார்ஸி சாஹிபாவும் வந்திருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:***

இந்த மாபெரும் ஹாலில் நடக்கக்கூடிய சர்வ சமய மாநாட்டில் கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் முன் என் கருத்துக்களைக் கூறுவது எனக்கு கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும். இந்த மாநாடு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வலுவான நம்பிக்கை, பரந்த மனம், பரந்த பார்வையை எடுத்துக் காட்டுகிறது. தாங்கள் எப்படிப்பட்ட உலகளாவிய அளவிலான சர்வ சமய மாநாடு நடத்தியுள்ளீர்கள். அதில் தங்களது கொள்கைகளை மட்டும் கூறாமல் அனைத்து மார்க்கங்களின் பிரதிநிதிகளுக்கும் தத்தமது கருத்துக்களைக் கூற அழைப்பு விடுத்துள்ளீர்கள். பிரிட்டனில் தொலைதூரத்தில் முழுக்க முழுக்க மனித நேயத்தின் அடிப்படையில் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக செய்யப்பட்ட நல்ல பணிகளின் அடையாளங்கள் நமக்கு தென்படுகின்றன.

***பிறகு கூறுகிறார்கள்:*** இந்த வெற்றி மாநாட்டின் மூலம் உலகில் உள்ள அனைத்து மார்க்கங்களும் ஒன்றாக அமர்ந்து ஒன்றுசேர்ந்து ஒற்றுமையின் பக்கம் அடியெடுத்து வைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதும் நிரூபணமாகி விட்டது. இதில் கலந்து கொள்வது எனக்கு பெருமைக்குரிய விஷயமாகும்.

ஆரம்பத்திலிருந்தே ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு உள்ள ***அமெரிக்காவின் US Commision on Inter National Religious Freedom–ன் Vice Chairman டாக்டர் கேட்ரினா அவர்கள் கூறுகின்றார்கள்:***

இன்று உங்களோடு (இந்த மாநாட்டில்) கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். பிரிட்டன் ஜமாஅத்தின் 100 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி நிகழும் இந்நிகழ்ச்சியில் வந்துள்ளேன்.

இவர் குறிப்பாக அமெரிக்காவிலிருந்து இந்த நோக்கத்திற்காகவே வந்திருந்தார்.

***கூறுகின்றார்கள்:*** இன்றைய நிகழ்ச்சி ஒற்றுமை மற்றும் மார்க்க சுதந்திரத்தை அடையாளம் கண்டு கொள்ள நடத்தப்படுகிறது. இதுவே உங்களுடைய ஜமாஅத்தின் அடிப்படைக் கொள்கையாகும். நீங்கள் அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் மார்க்கத்தின் அமைதி, ஒருவருக்கொருவர் புரிதல் மற்றும் சுதந்திரத்தோடு தொடர்புடையதாகும் என்பதற்கு உயிருள்ள உதாரணமாகும். கடந்த நூற்றாண்டை நாம் பார்க்கும் போது ஒரு அழகான காட்சி காணப்படுகிறது. அதில் நன்மை மற்றும் தூய்மையின் ஒளியின் மூலம் இருளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்ட பெரியவர்கள் தென்படுகிறார்கள். இங்கு ஒரு சில உதாரணங்களையும் கூறியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், 20ம் நூற்றாண்டில் உங்களது ஜமாஅத் எவ்வாறு மக்களுக்கு நடக்கும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கிறது என்று பார்க்கிறோம். இங்கு இவர் தவறில் உள்ளார். உண்மையில் இது 19ம் நூற்றாண்டிலிருந்தே மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகையிலிருந்தே அஹ்மதிய்யா ஜமாஅத் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கிறது. மேலும் இந்த அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் போதனைகளுக்கேற்பவே ஆகும்.

20ம் நூற்றாண்டிற்குப் பதிலாக 19ம் நூற்றாண்டு என்று இவர் கூறியிருக்க வேண்டும்.

***கூறுகிறார்:*** நாங்களும் உங்களைப் போன்று, நீதி மற்றும் சமத்துவத்தை பறைசாற்றுகிறோம். பல்வேறு கொள்கைகளை உடைய அனைத்து மக்களும் ஒன்றாக இருப்பதற்கும், ஒருவர் மற்றவருடைய பேச்சைக் கேட்கும் ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். எதுவரை ஒருவர் மற்றவர் மீது கண்ணிய உணர்வு கொள்ளமாட்டாரோ அதுவரை ஒருவர் மற்றவருடைய பேச்சைக் கேட்கவும் இயலாது. அஹ்மதிய்யா ஜமாஅத் தரும் சமத்துவத்திற்கான பாடத்தை மதிக்கிறேன். நம் அனைவருக்கும் நமது மார்க்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப அமல் செய்வதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். மேலும் எப்போது நாம் நம்மிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோமோ அப்போது அது சமத்துவம், நீதி, மனித நேயத்தைக் கருத்தில் கொண்டவாறு இருக்க வேண்டும். நாம் அனைவரும் இந்த நோக்கத்தை அடைவதற்கு நம்முடைய முழு மூச்சோடு முயற்சி செய்பவர்களாக ஆக வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

அல்லாஹ் இந்த மிகப்பெரும் சக்திகளுக்கு இதை புரியக் கூடியதாக ஆக்குவானாக!

***பிரிட்டன் பிரதமரின் தூதுச் செய்தியை அடார்னி ஜெனரல் ரைட் ஹானரபுல் டாமினிக் கிரீவ்ஸ் படித்துக் காட்டினார்கள். அதற்கு முன்பு அவர் தனது கருத்தைக் கூறினார்:***

தூதுச் செய்தியைக் கூறுவதற்கு முன்னர் Conference தொடர்பாக கூற விரும்புகிறேன். Conference–ற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் மிகச் சிறந்ததாகும். இங்கிருந்தே ஒரு சமுதாயம் என்கிற முறையில் ஆங்கிலேயர்களின் பரந்த பார்வை பிறந்தது. மேலும் உலகின் பக்கம் பார்க்க ஆரம்பித்தது. இன்று நாம் அனைவரும் இந்த கூட்டத்திற்காக ஒன்றுசேர்வதும் அதனால் கிடைத்ததே ஆகும். இன்றைய மாநாடு தனிச்சிறப்பு வாய்ந்தது. நான் ஒரு கிறித்தவன் என்கிற முறையில் அனுபவ ரீதியிலும் கருதுவது என்னவென்றால், ஒருவர் எந்த மார்க்கத்தையும் ஏற்றுக் கொண்டவராக இருந்தாலும் ஒரு மார்க்கமில்லாத மனிதரை விட அவர் மற்ற மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட மனிதரின் உணர்வுகளை சிறந்த முறையில் புரிந்து கொள்ள இயலும்.

அல்லாஹ் இவருடைய இந்த விஷயம் உண்மையானதாக ஆக்குவானாக! புரியக்கூடியவர்களாக ஆக்குவானாக!

***பிறகு (பிரிட்டன்) பிரதமரின் தூதுச் செய்தியைப் படித்துக் காட்டினார்:***

நான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்ட பல்வேறு மார்க்கங்களின் பிரதிநிதிகளை ஒரு பிளாட்ஃபார்மில் ஒன்றுசேர்த்ததில் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கிலாந்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிகரற்ற தொண்டுகளைப் பாராட்டுகிறேன். நீங்கள் ஒரு பக்கம் நாட்டின் தொலைதூரத்தில் சர்வ சமய மாநாடு நடத்துகிறீர்கள். மறுபக்கம் தற்போது வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கிறீர்கள்.

அல்லாஹ்வின் அருளால் குத்தாமுல் அஹ்மதிய்யா இதில் மிகப்பெரிய பணி செய்துள்ளது.

***பிறகு கூறுகிறார்கள்:*** மார்க்கங்களுக்கிடையே நல்ல தொடர்பை ஏற்படுத்துவதற்காக இன்று நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி நீங்கள் உங்களது மிஷனில் எந்த அளவு நேர்மையாக உள்ளீர்கள் என்பதற்கு சாட்சியாகும். பல்வேறு மார்க்கங்களின் மக்கள் ஒன்றுசேர்ந்து அமர வேண்டும். மேலும் முழு உலகிலும் அமைதி நிலவ வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இந்தக் கூட்டத்தில் பிரிட்டன் அரசின் பிரதிநிதித்துவமும் உள்ளதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாம் இமாம் ஜமாஅத்தே அஹ்மதிய்யா மற்றும் மற்ற பிரதிநிதிகள் மேலும் விருந்தினர்களோடு சேர்ந்து பல்வேறு மார்க்கங்கள் ஒன்று மற்றொன்றோடு ஒத்துழைத்து எவ்வாறு உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று ஆராய்வோம்.

***பிறகு இங்கிலாந்து சர்ச்சின் தலைவியான ராணியின் தனிச்செயலர் எழுதுகிறார்கள்:***

இங்கிலாந்து ராணிக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டனின் 100 ஆண்டு நிறைவையொட்டி இந்த மாபெரும் Guild Hall –ல் உலக சர்வ சமய மாநாட்டின் செய்தி மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். ராணிக்கு இந்த மாநாட்டின் நோக்கங்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி. மேலும் நீங்கள் தூதுச்செய்தி கேட்டு விண்ணப்பித்ததற்கு மிகவும் நன்றிபட்டுள்ளேன். இந்த மாநாடு வெற்றிகரமாக நடக்க ராணி வாழ்த்துகிறார்கள்.

இது மற்றவர்களின் ஒருசில கருத்துகளாகும். நான் இங்கு கூறியதன் சுருக்கத்தையும் கூறி விடுகிறேன். நான் கூறியது போன்றே அதிகம் பேர் கேட்கவில்லை என்று தெரிகிறது. மேலும் செய்தித்தாள்களில் இந்த அளவு விரிவாகவும் வரவில்லை. நான் என்ன கூறினேன் என்றால், அல்லாஹ் மனிதர்களின் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என விரும்புகிறான். மனிதன் இறைவனின் உரிமையையும் செலுத்துபவனாக இருக்க வேண்டும். மேலும் அவனின் அடியார்களின் உரிமையையும் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். மேலும் இந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் நபிமார்களை உலகில் அனுப்புகின்றான். எவர்கள் நபிமார்களின் பேச்சைக் கேட்கின்றனரோ அவர்கள் வெற்றி அடைகிறார்கள். எவர்கள் மறுத்தார்களோ அவர்கள் தீய விளைவை எய்தினார்கள். நபிமார்கள் மற்றும் மார்க்கத்தை மறுத்த, இறைவனால் அனுப்பப்பட்டவரை மறுத்த, இறை இருப்பை மறுத்த மேலும் இவை அனைத்தும் வெறும் விஷயங்களாகும். இறைவனும் இல்லை. எந்தவொரு தண்டனையும் இல்லை. அப்படிப்பட்ட அனைத்து சமுதாயங்களும் அழிந்து விட்டன. திருக்குர்ஆன் அப்படிப்பட்ட சமுதாயங்களின் வரலாற்றால் நிரம்பிக் காணப்படுகிறது. இதுபற்றி பல்வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்று மற்ற மார்க்கங்களின் வேதங்களும் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவர்களை நிராகரிப்பவர்கள் அழிந்து விட்டனர் என்று கூறுகின்றன.

ஆக, இந்த விஷயங்கள் நம்மை சிந்திக்க நிர்பந்திக்க வேண்டும். இவை கதைகள் அல்ல. மாறாக, இது உண்மை என்று அனைத்து மார்க்கங்களின் வரலாறும் சான்று பகர்கின்றன. பிறகு நான், எந்த வேதத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றால் அது திருக்குர்ஆன் ஆகும் என்று கூறினேன். இறைவன் நபிமார்களை அனுப்பி மனிதன் ஆன்மீகத்தின் உயர் தரத்தை நிலைநாட்டியவாறு இறைவனோடு தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவனது உரிமையைச் செலுத்த வேண்டும் என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது. இதுபோன்று உயர் நல்லொழுக்கத்தின் தரத்தை நிலைநாட்டியவாறு அல்லாஹ்வின் அடியார்களின் உரிமையைச் செலுத்த வேண்டும்.

***மேலும் நான் கூறினேன்:*** எப்போது இறைவன் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை உலகின் சீர்திருத்தத்திற்கு அனுப்பினானோ அப்போது அன்னார் இதனை அடைவதற்கு தப்லீகை எல்லை வரை சென்றடையச் செய்தார்கள். மாறாக நல்ல விளைவு ஏற்படுவதற்காகவும், மக்களின் உள்ளங்கள் திறப்பதற்காகவும் எந்த அளவுக்கு அன்னார் இரவில் துஆ செய்தார்கள் என்றால், அன்னார் ஸஜ்தா செய்த இடம் கண்ணீரால் நனைந்து விட்டது. அன்னாரது உள்ளத்தில் மனிதனின் சீர்திருத்தம் மற்றும் அவனை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான வேதனை எந்த அளவு இருந்ததென்றால் அதை சொல்ல இயலாது. அன்னாரது உருக்கம் மற்றும் துஆவின் நிலைமையைப் பார்த்து இறைவன் இவ்வாறு கூறினான்: *அவர்கள் உன்னுடைய பேச்சைக் கேட்கவில்லையாயின் நீர் உமது ஆன்மாவை மாய்த்துக் கொள்வீரா ? (18:7)* என்று கூறினான்.

ஆனால் இறைவன் இவ்வாறு கூறி மட்டும் விடவில்லை. துஆவை நிராகரிக்கவும் இல்லை. மாறாக இந்த துஆக்களை ஏற்றுக் கொண்டான். மேலும் வலி நிவாரணத்திற்கான ஏற்பாட்டைச் செய்தான். மேலும் எல்லா விதமான தீமைகளிலும் மூழ்கியிருந்த மக்களை தீமைகளிலிருந்து விலக்கி ஒழுக்கமுடைய, அல்லாஹ்வோடு தொடர்பை ஏற்படுத்தக்கூடியவர்களாக ஆக்கி விட்டான். எந்தவொரு உலக சக்தியும் இந்த மாற்றத்தை செய்ய இயலாது. இது முழுக்க முழுக்க துஆக்களைக் கேட்கக்கூடிய, உள்ளங்களில் ஆட்சி செய்கின்ற இறைவனின் செயலாகும்.

***பிறகு நான் கூறினேன்:*** ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எதிரிகளோடு எந்த அளவு நல்ல முறையில் நடந்து கொண்டார்கள் என்றால், உலகில் அதுபோன்ற முன்மாதிரியை வேறெங்கும் காண இயலாது. எந்த எதிரிகள் மக்காவில் எதிர்ப்பின் எல்லையை அடைந்திருந்தார்களோ அவர்களை மக்கா வெற்றியின் போது அவர்கள் எந்தவொரு தவறும் செய்யாதவர்களைப் போல மன்னித்தார்கள். ஒவ்வொரு காஃபிரையும் சட்டத்திற்குட்பட்டு அமைதியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் மன்னித்தார்கள். மேலும் இந்த நன்னடத்தையைப் பார்த்து பெரும் பெரும் எதிரிகள், குஃப்ரில் மிகைத்தவர்கள் தன்னையும் அறியாமலேயே இப்படிப்பட்ட உணர்வு இறைவனுடைய நபிக்கு மட்டுமே இருக்க முடியும் என்று கூறினார்கள். மேலும் நிச்சயமாக இஸ்லாம் உண்மையானதாகும். பிறகு அவர்கள் ஈமானும் கொண்டனர்.

***பிறகு நான் கூறினேன்:*** திருக்குர்ஆனில் இறைவன் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை ரஹ்மத்துல் லில் ஆலமீன் – முழு உலகங்களுக்கும் ஓர் அருட்கொடை என்று கூறியுள்ளான். நிச்சயமாக அன்னார் அருட்கொடையின் இறுதி எல்லை வரை அடைந்திருந்தார்கள். நிச்சயமாக இறை வார்த்தைக்கு சான்று பகர்கின்ற ஆயிரக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. அன்னாரது ரஹ்மத்திற்கு ஆதாரமாக எடுத்துக் கூற இயலும்.

***பிறகு நான் கூறினேன்:*** அன்னார் ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஆக இருந்தும்கூட இஸ்லாம் மற்றும் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் மீது கடினம் மற்றும் போரின் ஆட்சேபனை செய்யப்படுகிறது. இது வரலாற்று உண்மையை அறியாததன் விளைவாகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒருபோதும் போரில் முந்திக் கொள்ளவில்லை. மக்காவில் அநீதி இழைக்கப்பட்டார்கள். எப்போது இந்த அநீதி தாங்க முடியாத அளவுக்குச் சென்றதோ அப்போது மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஒருபோதும் பழிவாங்கவில்லை. எப்போது மக்கத்தினர் முஸ்லிம்களை அழிப்பதற்கு மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தார்களோ பிறகு இறைவனின் கட்டளையின்படி பதில் கூறினார்கள். திருக்குர்ஆனிலும் வந்துள்ளது. நான் திருக்குர்ஆனின் இந்த வசனத்தைப் படித்துக் காட்டினேன். சூரா ஹஜ்ஜின் இரண்டு வசனங்களாகும்.

الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلَّاۤ اَنْ يَّقُوْلُوْا رَبُّنَا اللّٰهُ ؕ وَلَوْلَا دَفْعُ اللّٰهِ
النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ لَّهُدِّمَتْ صَوَامِعُ وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّمَسٰجِدُ
يُذْكَرُ فِيْهَا اسْمُ اللّٰهِ كَثِيْرًا ؕ وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ ؕ اِنَّ اللّٰهَ لَقَوِيٌّ عَزِيْزٌ ۝

اَلَّذِيْنَ اِنْ مَّكَّنّٰهُمْ فِى الْاَرْضِ اَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ وَاَمَرُوْا
بِالْمَعْرُوْفِ وَنَهَوْا عَنِ الْمُنْكَرِ ؕ وَلِلّٰهِ عَاقِبَةُ الْاُمُوْرِ ۝

*எங்களின் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும், அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்கவைக்கவில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்திவாய்ந்தவனும் மிகைத்தோனும் ஆவான்.*

*(நாட்டைத் துறந்து சென்ற முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு நாம் உலகில் வலிமையினை வழங்கினால், அவர்கள் தொழுகையினை நிலைநாட்டுவார்கள். ஸகாத்தும் கொடுப்பார்கள். நல்லவற்றைச் செய்யுமாறு ஏவி தீயவற்றைத் தடுப்பார்கள். எல்லாச் செயல்களின் முடிவும் அல்லாஹ்விடம் உள்ளது. (22:41-42)*

***நான் கூறினேன்:*** இந்த வசனத்தின் ஒளியில் அநீதிக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு பாதுகாத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இரண்டாவது இந்த அனுமதியினால் மற்ற அனைத்து மார்க்கங்களும் பாதுகாக்கப்பட்டன. மேலும் இறைவனின் வாக்குறுதியாகும். அதாவது இறைவன் வல்லமையுள்ளவனாவான். அவன் நிராகரிப்பவர்களுக்கு எதிராக பலவீனமான முஸ்லிம்களுக்கு உதவி செய்யும் ஆற்றல் உடையவனாவான். நிராகரிப்பவர் அனைத்து சக்திகள் இருந்தும், ஆயுதங்கள் இருந்தும் தோல்வி அடைவார்கள். மேலும் இறைவன் தன் இருப்பிற்கு ஆதாரம் வழங்கியவாறு நிராகரிப்பவர் மீது பலவீனமான முஸ்லிம்களுக்கு வெற்றியும் வழங்கினான். மேலும் ஆயுதங்கள் ஏந்திய மிகப்பெரிய படையைத் தோற்கடித்தார்கள். ஆக, ரஸூல் (ஸல்) அவர்களும் அன்னாருடைய கலீஃபாக்கள் (குலஃபாயே ராஷிதீன்கள்) செய்த போர்கள் பாதுகாப்பிற்காகவும், அமைதியை நிலைநாட்டவும் செய்த போர்களாகும். அரசாங்கங்களை அடைவதற்காக செய்யப்பட்ட போர்களல்ல. இதனால் பிறகு இறைவனின் இறை உதவி உடனிருந்தது.

***பிறகு நான் கூறினேன்:*** ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் பலவீனமான மற்றும் மார்க்கத்தை விட்டு தூரம் செல்லக் கூடிய முன்னறிவிப்பும் செய்திருந்தார்கள். இன்று முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஏதேனும் அநீதியிழைக்கப்பட்டால் அல்லது அவர்களின் மோசமான நிலையை நாம் பார்க்கிறோம். இதுவும் முன்னறிவிப்பிற்கு ஏற்பவே ஆகும்.

***பிறகு இதையும் கூறினேன்:*** முஸ்லிம்களின் இறுதிநிலை இதுவல்ல. முஸ்லிம்கள் முடிந்து விட்டார்கள் என்று கருத வேண்டாம். இதுவும் எனது நம்பிக்கையாகும். மேலும் இந்த நம்பிக்கையில் நான் உறுதியாக உள்ளேன். அதாவது எவ்வாறு முஸ்லிம்களின் வீழ்ச்சியின் முன்னறிவிப்பு நிறைவேறியதோ அதுபோன்று முஸ்லிம்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கான முன்னறிவிப்பும் நிறைவேறும். அது மஸீஹே மவ்வூதின் வருகையோடு நிறைவேற வேண்டியிருந்தது.

***நான் கூறினேன்:*** நானும், அஹ்மதிய்யா ஜமாஅத்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரின் வடிவில் வந்து விட்டார் என்று நம்பிக்கை கொள்கிறோம். மேலும் தன்னைப் பின்பற்றுபவர்களை உண்மையான இஸ்லாத்தின் போதனையில் நிலைநிறுத்தி விட்டார்கள். உண்மையான இஸ்லாத்தின்படி அமல் செய்கின்ற அல்லது செய்ய முயற்சி செய்கின்ற ஒரு ஜமாஅத்தை உருவாக்கினர்கள்.

***பிறகு இதையும் கூறினேன்:*** இஸ்லாத்தை மீண்டும் உயிரூட்ட வந்த மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடும் அல்லாஹ்வின் உதவிகள் உள்ளன. உதாரணமாக, மூன்று விஷயங்களை எடுத்துக் கூறினேன். அன்னாரின் உண்மைத்துவத்திற்குச் சான்றாக இந்த மூன்று முன்னறிவிப்புகளை எடுத்துக் கூறினேன். அன்னார் இந்தக் காலத்தில் நிலநடுக்கம் மற்றும் புயலின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் எனக் கூறினார்கள். இது உண்மை என நிரூபணமானது. இன்று நாம் பார்க்கிறோம். முந்தைய நூற்றாண்டுகளை ஒப்பிடுகையில் இந்த நூற்றாண்டில் மிக அதிகமாக நிலநடுக்கங்கள் வந்துள்ளன. பிறகு அன்னார் ஒரு முன்னறிவிப்பு செய்தார்கள். ரஷ்யாவின் அரசு கவிழ்வது தொடர்பான முன்னறிவிப்பும் உண்மை ஆனது. மூன்றாவதாக, போர்கள் பற்றிய ஒரு முன்னறிவிப்பு செய்தார்கள். இதுவரை நாம் இரண்டு உலகப் போர்களைப் பார்த்து விட்டோம் என்று கூறினேன். உலகம் மீண்டும் இந்த சூழலுக்கு வர முயற்சி செய்து வருகிறது. உலகின் ராணுவ பட்ஜெட் மற்ற அனைத்யையும் புறந்தள்ளி விட்டது. மேலும் முழுக்க முழுக்க படையை அதிகரிக்கவும், ஆயுதங்களை அதிகரிக்கவும், படை சக்தியை அதிகரிப்பதன் பக்கமுமே உலகம் கவனம் செலுத்துகிறது. எனவே உலகத்திற்கு மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. உலகில் அமைதியின்மை மார்க்கத்தின் காரணமாக பரவுவதில்லை. மாறாக பேராசை மற்றும் அரசியலே இதற்கு காரணமாகும்.

***பிறகு நான் இதையும் கூறினேன்:*** இந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரோடு இறைவனின் உதவிகள் உள்ளன. இது இல்லையென்றால் இந்தியாவின் தொலைதூரத்தில் இருக்கக்கூடியவரால் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை முழு உலகிலும் பரப்ப இயலாது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு கிலாஃபத் அமைப்பு உருவானது. அதன் கீழ் இந்த மிஷன் முன்னேறிக் கொண்டு செல்கிறது. இது இந்தக் காலத்தில் இறை இருப்பின் ஆதாரமாக திகழ்கிற்தோ அதே சமயம் அஹ்மதிய்யா ஜமாஅத்தோடு இறைவனின் உதவிகள் உள்ளன என்பதற்கும் ஆதாரமாகும்.

***நான் கூறினேன்:*** அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் இந்த விஷயங்கள் பழைய கதைகள் அல்ல. மாறாக, இன்றும் இறைவன் தன்னுடைய நல்லடியார்களோடு பேசுகிறான். மேலும் அடையாளம் காட்டுகிறான் என்ற அறிவை வழங்கினார்கள். ஆக, உலகம் தன் தவறை இறைவன் மற்றும் மார்க்கத்தின் பெயரில் போடாமல் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தன்னைப் பார்க்க வேண்டும். அல்லாஹ் உலகிற்கு இதன்படி அமல் செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இது நான் அவர்களிடம் கூறியதன் சுருக்கமாகும். எனது உரை ஏறக்குறைய **30, 35** நிமிடங்கள் உடையதாக இருந்தது. இப்போது ஒரு சில கருத்துகளையும் எடுத்துக் கூறுகிறேன். சுருக்கமாக, எடுத்துக் கூறப்பட்ட இஸ்லாத்தின் போதனையின் தாக்கம் அவர்களிடம் உள்ளது என்பது அவர்களுடைய முகங்களில் தெரிந்தது. சிலர் வெளிப்படுத்தவும் செய்தார்கள்.

**Europian Council for Religious Leaders –ன் *ஜெனரல் செகரட்டரி ஸ்டேன் வில்லம் ஸ்டேட் கூறினார்:***

இவ்வாறு ஒன்றுசேர்ந்து அமர்வது பல்வேறு மார்க்கங்களின் விஷயங்களைக் கேட்பது பிறகு நாம் அனைவரும் அமைதியை விரும்பக் கூடியவர்கள் என்று ஒப்புக் கொள்வது மிகப்பெரிய வெற்றியாகும்.

***பிறகு இங்கிலாந்தில் ஜெர்னாடாவின்* High Commission His Excellency ஜோஸ்லின் வைட்மேன் *கூறுகிறார்:***

இது ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும். இத்தனை மார்க்கங்கள் ஒரே கூரையின் கீழ் ஒன்றுசேர முடியுமா என்று எண்ணுகிறேன். எங்களது ஈமானை அதிகரிக்கக் காரணமாக இருக்கிறது. இன்றைய மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண மக்களை எவ்வாறு ஒன்றிணைக்க முடியும் என்று அறிந்து கொள்ளும் பலனும் இதில் உள்ளது.

பிறகு மேக்கிஷ்தி இலண்டனில் Metro Politen Police –ல் கவுன்ஸிலராக இருக்கிறார். இன்றைய நிகழ்ச்சியில் ஒவ்வொருவரும் தத்தமது மார்க்கத்தின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும் மற்ற மார்க்கத்தைக் குறை கூறவில்லை. இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதன் மூலமாக நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்ற உணர்வு ஏற்படுகிறது.

இதையே செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ராணிக்கும் கடிதம் எழுதினார்கள்.

***பிறகு இலண்டன் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதிநிதி டாக்டர் சார்லஸ் டேனாக் கூறுகிறார்:***

வருங்காலத்தில் இந்த வழியை மேற்கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை. நாம் அனைவரும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். நாம் மார்க்கத்தின் பெயரில் இவ்வாறு சண்டையிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறான் என ஒருபோதும் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆக, அமைதியின் இந்த தூதுச் செய்தியை நான் வழிமொழிகிறேன். இவர்களது மார்க்கத்தின் அடிப்படை 'எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் பகையில்லை' என்பதிலிருந்து நான் அஹ்மதிய்யத்தை கண்ணியத்தோடு பார்க்கின்றேன். இது உலக அளவிலான தூதுச் செய்தி என நான் கருதுகிறேன். இந்த அளவு பல்வேறு மார்க்கங்கள் ஒன்றாக அமர்வது சிறந்ததாகும்.

***இங்கிலாந்து பாராளுமன்றத்தின்* All Party Parliamentary Group of International Freedom of Religion –ன் Chair person ஆக உள்ள பேருனிஸ் *பேரிஜ் கூறுகிறார்:***

எனக்கு All Party Group –ன் மார்க்க சுதந்திர தின சேர்மனாக இருக்க பெருமை உண்டு. அஹ்மதிய்யா இயக்கம் மற்றவர்களின் நலனுக்காக தொண்டாற்றி வருகிறது என்பதை நான் அறிவேன். மேலும் இந்த விஷயத்தை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமும் தனது உரையில் கூறினார்கள். நாங்கள் அஹ்மதிய்யா இயக்கத்துடன் அவர்களுடைய பணிகளில் உதவி புரிகிறோம் என்ற மகிழ்ச்சி உள்ளது. மேலும் அஹ்மதிகளுக்கு இந்த நாட்டில் முழு சுதந்திரம் உள்ளது என்பதிலும் மகிழ்ச்சி உள்ளது.

***பிறகு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் All Party Parliamentary Group of International Freedom of Religion –ன் உறுப்பினராக உள்ள கார்டிரிஜ் கூறுகிறார்:***

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறியது போன்று அனைத்து மார்க்கங்களின் அடிப்படை விஷயமும் ஒன்றாகவே தெரிகிறது. அதாவது அன்பு, அமைதி ஆகும். உண்மையில் மீடியாவில் மார்க்கம் மனிதன் ஒருவருக்கொருவர் சண்டையிடக் காரணமாகும் பொருளாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் நாம் இன்றைய இக்கூட்டத்தில் கண்டது போல் உண்மை இதற்கு நேர்மாற்றமானதாகும்.

***பிறகு Chief ரபாயி ஆகிய எய்ட்டிரப் தூதுச் செய்தியில் கூறுகிறார்:***

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் தூதுச் செய்தி அமைதி மற்றும் ஒருவர் மற்றவரை புரிதல் தொடர்பானதாகும். மேலும் உலகின் அனைத்து மார்க்கங்களும் ஒருவர் மற்றவரோடு கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டும்.

ஏனென்றால் நாம் அனைவரும் ஆதமின் சந்ததிகள் ஆவோம். இறைவனின் படைப்புகளாவோம்.

***கூறுகிறார்கள்:*** நாம் ஒருவர் மற்றவரது உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களோடு சண்டையிடாமல் ஒன்றாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு இயலுமோ அமைதிக்காக முயற்சி செய்ய வேண்டும். இவர் ரபாயி ஆவார். இவர் இஸ்ராயீலின் அரசாங்கத்திற்கும் இதுபற்றி கூற வேண்டும்.

***பிறகு ஒரு கவுன்ஸிலர் சத்தோக் சிங் சாஹிப் கூறுகிறார்கள்:***

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அனைத்து மார்க்கங்களிலும் பல்வேறு போதனைகள் ஒன்றுபட்டுள்ளது. அனைத்து மார்க்கங்களும் மனித நேயத்தைக் கூறுகின்றன. நாம் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வேண்டும். ஒருவர் மற்றவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று புரிய வைப்பதாக நான் கருதுகிறேன் என்று கூறினார்.

***பிறகு நார்வேயிலிருந்து ஒரு அரசியல் கட்சியின் எரிடேன்தர் கூறுகிறார்:***

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தனது உரையின் இறுதியில் மிகவும் முக்கியமான தூதுச் செய்தி தந்துள்ளார்கள். அதாவது நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வேண்டும். இதுவே உலகிற்கு இப்போது மிக அவசியமாகும் என நான் கருதுகிறேன். இந்த தூதுச் செய்தி நார்வேயிலும் மிக அவசியமானதாக உள்ளது.

***ஆம்ஸ்டர்டாமின் பல்கலைக்கழகத்தின் புரொஃபொஸர் டாக்டர் டிஉன்னியர்ஸ் கூறுகிறார்:***

இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் கடினத்திற்குப் பகரமாக அமைதியை நிலைநாட்ட வலியுறுத்துகிறது என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தெளிவான வார்த்தைகளில் நிரூபித்துள்ளார்கள்.

***பிறகு Greek Orthodox Patriarchate of Antioch உடன் தொடர்புடைய Father ஏத்தல் வைன் கூறினார்:***

நான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமை மனமாற பாராட்டுகிறேன். எப்போதும் போன்றே எல்லா உரைகளையும் விட ஜமாஅத்தின் கலீஃபாவின் உரையே சிறந்ததாக இருந்தது. நிச்சயமாக பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்தவர்களை ஒன்றுசேர்த்து மேலும் அவர்களிடமிருந்து அவர்களின் மார்க்க விஷயங்களைக் கேட்பது மிகவும் துணிச்சலான, பாராட்டிற்குரிய நடவடிக்கையாகும். இது மிகப்பெரும் வெற்றியாகும்.

***அயர்லாந்திலிருந்து ஒருவர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்:***

நான் இந்த Conference –ல் கலந்து கொண்டேன். இங்கு எனக்கு கிடைத்த தூதுச் செய்தி என்னை உலுக்கி விட்டது. நான் அஹ்மதிகளிடம் இதை கூறுவேன். அதாவது இன்று உலகில் விளம்பரம் இல்லாமல் தனது தூதுச் செய்தியை பரப்புவது மிகவும் கடினமானதாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த அளவு பணி செய்கிறது. ஆனால் நீங்கள் உங்கள் பணிகளைப் பற்றி சிறந்த முறையில் விளம்பரப்படுத்தினால் எனக்கு சந்தோஷம் கிடைக்கும். ஏனென்றால் உலகில் கைப்பிடி அளவுள்ள மக்களே உங்களை அறிவார்கள்.

***European Councill of Religious Leaders –ன் தொடர்புடைய ஜஹாங்கீர் ஸாரு சாஹிப் கூறுகிறார்:***

நான் ஜொராஷ்டிர மதத்தைச் சேர்ந்தவன் ஆவேன். நான் இந்த நிகழ்ச்சியின் மூலம் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். அனைத்து பேச்சாளர்களும் சிறந்த முறையில் உரை நிகழ்த்தினார்கள். ஆனால் இறுதியில் இமாம் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் உரை மிகச் சிறந்ததாக இருந்தது.

***பிறகு ராபினின்னீஸ் மார்க்கக் கல்வியின் ஆசிரியர் கூறுகிறார்:***

இந்த அளவு ஆன்மீகம் நிறைந்த உரையாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. பல்வேறு மார்க்கங்களின் தூதுச் செய்திகளை நான் கேட்டுள்ளேன். மேலும் நான் வீட்டிற்குச் சென்று இந்த விஷயங்களை ஆராய்ந்து பார்ப்பேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் உடைய சொற்பொழிவு எழுத்து வடிவில் விரைவில் வெளியிடப்படும் என்று நம்புகிறேன்.

***பிறகு கதீட்ரலோடு தொடர்புடைய டாக்டர் கேன் கூறுகிறார்:***

சிறிது காலத்திற்கு முன்பு மக்கள் நமக்கு மார்க்கத்தின் தேவை இல்லை என்று கருத ஆரம்பித்து விட்டனர். இது முற்றிலும் அடிப்படைய அற்றது என்று தெளிவாக நிரூபணமாகி விட்டது என்று நான் கருதுகிறேன்.

***பிறகு பெல்ஜியம் பல்கலைக்கழகத்தின் டாக்டர் லீதியா மற்றும் இன்னொரு புரொஃபொஸர் இருவரும் கூறினார்கள்:***

இஸ்லாம் மற்றும் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் உண்மையான போதனை தொடர்பாக இமாம் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் உரையைக் கேட்டு அவர்கள் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார்கள். உரையைக் கேட்ட பிறகு நாங்கள் எங்களுடைய பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு திருக்குர்ஆனின் Flemish மொழியாக்கம் கொடுப்போம் என முடிவு எடுத்தோம். அதன் மூலம் அவர்கள் திருக்குர்ஆனைப் படித்து இஸ்லாத்தின் உண்மையான போதனையை அறிய வேண்டும். திரும்ப சென்ற பிறகு அவர்களுக்கு மொழியாக்கமும் கொடுக்கப்பட்டு விட்டது. இப்போது அவர்கள் யுனிவர்சிட்டிக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் இறை அருளால் தப்லீகிற்கான வழிகள் மேலும் திறக்கின்றன.

St. யாகோ கதாரோபியோ சாஹிப் ஸ்பெயினில் இருந்து வந்தார்கள். Madrid University –ல் Religion–ன் Professor ஆவார். பல்வேறு புத்தகங்களையும் எழுதியுள்ளார். இவருக்கு ஜமாஅத்தோடு நெருங்கிய உறவு உள்ளது. 2012 –ல் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியிலும் வந்திருந்தார்கள். மேலும் என்னையும் சந்தித்தார்கள். கூறுகிறார்கள்: இந்த உலக சர்வசமய மாநாட்டைப் பற்றி தன்னுடைய கருத்துகளையும் உணர்வுகளையும் கூற ஆரம்பித்தால் இந்த மாநாட்டின் முக்கியத்துவம் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியின் முக்கியத்துவத்தைக் கூறுவதில் பல பக்கங்கள் நிரம்பி விடும். உலக வரலாற்றில் மார்க்கங்கள் பல்வேறு பிரச்சனைகளுக்குக் காரணமாக இருந்துள்ளன. எதுவரையென்றால், இன்றைய காலத்திலும் கூட பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையிலும் கிழக்கு மற்றும் மேற்கு இஸ்லாம் மற்றும் கிறித்தவம் முன்னேற்றம் அடைந்த மற்றும் முன்னேறும் நாடுகளுக்கு இடையில் வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாடுகள் வெறுப்பு மற்றும் அநீதியை அதிகரிப்பதற்கு சாக்குப்போக்காக எடுத்துக் கூறலாம். ஆனால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முழக்கம், எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் பகையில்லை என்பது அனைத்து மார்க்கங்களின் சுருக்கமாகும். இந்த முழக்கம் உலகின் அனைத்து மார்க்கங்களும் அனைத்து மக்களும் அவர்களின் கொள்கைகள், நிலைகள் மற்றும் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு ஒன்றுசேர்ந்து விடுகிறது. முஸ்லிம்களின் ஒரு பெரும் பகுதி சண்டை, வெறுப்பு, அநீதி, தன்னுடைய மற்றும் பிறருடைய வாழ்க்கையை அபாயத்தில் போடக்கூடிய, தனது மக்களை தாக்குவதற்கு உதவி செய்கின்ற நேரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செயல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு உலகளாவிய அளவில் மார்க்க கம்யூனிட்டிகளின் வரவேற்பு கிடைக்க வேண்டும்.

பெட்ரோபாதிலிருந்து நீகல் கார்ஸியா பிரோஸா பார்ஸி அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இவர் மேயராகவும் இருந்துள்ளார். மேலும் தனது காலத்தில் சர்ச்சின் எதிர்ப்பு இருந்த போதிலும் 1980 –ல் மஸ்ஜித் பஷாரத் கட்டுவதற்கான அனுமதி வழங்கினார். மஸ்ஜித் பஷாரத்தின் திறப்பு விழாவின் போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் இவருக்கு கலிமா எழுதியுள்ள ஒரு ஃபிரேமை அன்பளிப்பாக வழங்கினார்கள். அதை அவர் தன்னுடைய அலுவலகத்திலும் மாட்டினார்கள். ஜமாஅத்தின் நல்ல தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்.

***இவர் கூறுகிறார்:*** அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தரப்பிலிருந்து பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த குழுக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், பல்வேறு மனித கருணை தொடர்புடைய அமைப்புகளின் பிரதிநிதிகளை இலண்டனில் ஒருங்கிணைத்து உலக அமைதியைப் பற்றி பேசுவதை சிந்திக்க வைத்துள்ளார்கள். இது மிகவும் சிறந்த ஒரு நடவடிக்கையுமாகும். நான் இந்நிகழ்ச்சியை நடத்திய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த ஜமாஅத் தனது நோக்கத்தை அடைவதில் வெற்றி பெற வேண்டும் என ஆசைப்படுகிறேன். மிகப்பெரிய பெருமைக்குரிய விஷயம் என்னவென்றால், 1981 –ல்

மஸ்ஜித் பஷாரத்தின் அடிக்கல் நாட்டு விழாவின் போது மூன்றாவது கலீஃபாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1982 –ல் அதே பள்ளியின் திறப்பு விழாவின் போது நான்காவது கலீஃபாவை சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. மேலும் இப்போது இந்த Conference –ன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபாவை சந்திக்கும் பாக்கியமும் கிடைத்து விட்டது. நான் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் போர்களற்ற ஒரு அமைதியான சமூகம் தொடர்பாக பேசிய வார்த்தைகளால் நான் சிறந்த தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளேன். மேலும் அவர்கள் பாதுகாப்பு என்ற பெயரில் மனித குலத்தை விட ஆயுதத்திற்கு முன்னுரிமை வழங்கும் அரசாங்கங்களையும் கண்டித்தார்கள். மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் நீதி மற்றும் ஒருவருக்கொருவர் இடையே கண்ணியம் மற்றும் மரியாதையின் அடிப்படையில் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்க பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஓரிடத்தில் ஒருங்கிணைக்க அழைப்பு விடுத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் வேறுபாடுகளால் நிரம்பியுள்ள ஓர் உலகில் இருந்து வருகிறோம். ஒரு சில நாடுகள் முன்னேற்றத்தின் எல்லையைத் தொட்டு விட்டன. அதே சமயம் மக்களின் ஒரு பெரும் எண்ணிக்கை பசி பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் இலட்சக்கணக்கான டன் உணவு கடலில் வீசி விடுகின்றனர். இன்னொரு பக்கம் கோடிக்கணக்கான மக்களுக்கு மிகவும் கஷ்டமாக உண்பதற்கு சிறிது தான் கிடைக்கின்றது. ஒரு பக்கம் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இன்னொரு பக்கம் சமூகத்தின் ஒரு சில பகுதிகள் மிகவும் ஏழைகளாகி விட்டன. போரை விட்டு விட்டு அமைதியை நாடுகின்ற அனைவரையும் ஒன்றுசேர்த்து அநீதிக்கு எதிராக நிற்கக்கூடிய மேலும் நீதியை நிலைநாட்டக்கூடிய ஒரு உலகை உருவாக்கும் தேவை உள்ளது.

எவ்வாறிருப்பினும், இது ஒரு சில கருத்துக்களாகும். அல்லாஹ் உலகை தன்னைப் படைத்தவனின் பக்கம் திரும்பக் கூடியதாக ஆக்குவானாக! மேலும் இறைவனை அடையாளம் கண்டு கொள்வதன் மூலமே நம்முன் நிற்கின்ற இந்த அழிவிலிருந்து தப்பிக்கலாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது எழுத்துக்களில் பல இடங்களில் இதைப் பற்றி எச்சரிக்கை செய்துள்ளார்கள். இது தவிர இன்று நான் மீண்டும் பாகிஸ்தானின் நிலைமை தொடர்பாக துஆவிற்காக கூற விரும்புகிறேன். துஆ செய்யுங்கள். அல்லாஹ் தீயவர்களிடமிருந்து அந்த நாட்டைக் காப்பாற்றுவானாக! மேலும் அமைதியை நாடும் அனைத்து மக்களையும் இந்த குழப்பத்திலிருந்து தப்பிக்க நினைக்கும் அனைத்து மக்களையும் பாதுகாப்பாக வைப்பானாக! இதுபோன்று சிரியாவின் நிலைமை தொடர்பாகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்கும் அஹ்மதிகளை பாதுகாப்பாக வைப்பானாக!

கடந்த நாட்களில் மீண்டும் ஓர் அஹ்மதி எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டிருந்தார்கள். அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளையும் பாதுகாப்பானாக! மேலும் பொதுவாக உலகத்திற்காகவும் துஆ செய்யுங்கள். உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலைமைகளிலிருந்து மிக வேகமாக உலகம் போரின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றது என தோன்றுகிறது. போர் மூண்டால் என்ன நிலை உருவாகும் என பெரிய அரசாங்கங்கள் இந்த விஷயத்தைப் புரிவதில்லை. உலகம் முற்றிலும் அழிவின் விளிம்பில் நிற்கின்றது. இவர்களுக்காக அதிகமாக துஆ செய்வது நமது கடமையாகும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **07.03.2014**

Translated by : Maulavi M.B. TAHIR Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456